**சிலாபம் நகர சபை**

**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 20 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, சிலாபம் நகரசபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிலாபம் நகரசபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ஐந்தொகையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆயுர்வேத திணைக்களத்தால் அன்பளிப்பாகப் பெறப்பட்டிருந்த ரூபா 310,000 தொகையான ஆயுர்வேத மருந்துப் பொருட்களின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முத்திரைக் கட்டண நிலுவை வருமானம் ரூபா 12,806,598 தொகையான போதிலும் முத்திரைக் கட்டணப் பதிவேட்டின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முத்திரைக் கட்டண நிலுவை வருமானம் ரூபா 35,500,000 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 22,693,402 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நூலகங்கள் மற்றும் சுகாதார நிலையக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியான ரூபா 26,188,574 மூலதனச் செலவினம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 03 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கணக்குகளின் படியான மீதி ரூபா 10,925,746 தொகையானதுடன் பட்டோலைகளின் படியான மீதி ரூபா 3,766,795 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 7,158,951 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடு கண்டறியப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 175,733,267 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நகர சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,060,148 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,930,863 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 11,610 | 8,470 | 17,591 |
| (ii) | வாடகை | 19,440 | 29,093 | 3,527 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,410 | 1,261 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,303 | 1,594 | 12,830 |

#### 2.2.2 வீத வரி

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட வீத வரிப் பெறுமதி ரூபா 12,634,832 ஆகக் காணப்பட்டது.

#### 2.2.3 முத்திரைக் கட்டணம்

மாகாண பிரதம செயலாளரிடமிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டியதாகக் காணப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 34,233,854 ஆகக் காணப்பட்டது.

**2.2.4 ஏனைய வருமானம்**

நகர சபைக் கட்டளைச் சட்ட அதிகாரச்சட்டத்தின் 164 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹொட்டேலின், சிற்றுண்டிச் சாலையின் அல்லது விடுதி ஒன்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் இதற்கு முன்னைய ஆண்டில் அந்த ஹொட்டேலின், சிற்றுண்டிச் சாலையின் அல்லது விடுதி ஒன்றின் பெறுவனவுகளில் 1% இனை விஞ்சலாகாத கட்டணமான போதிலும் சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள அத்தகைய இரு ஹொட்டேல்களிலிருந்து மீளாய்வாண்டின் போது அத்தகைய அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2002 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் பெறுவனவுகளில் இருந்து பெறுமதி சேர் வரி அறவிடப்படலாகாத போதிலும் 2009 ஆம் ஆண்டின் போது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடனாகப் பெறப்பட்டிருந்த ரூபா 47,016,653 தொகைக்காக பெறுமதி சேர் பூர்த்தி வரியாக ரூபா 5,037,498 தொகை கணிப்பிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நகர சபையின் அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களாக கடமையாற்றிய மூன்று ஊழியர்களுக்காக ஓய்வூதிய விதவைகள் அனாதைகள் உரிமை வழங்கப்படுவதற்காக சேமலாப நிதிய சேவைக் காலம் ஓய்வூதிய உத்துடைய சேவைக் காலமாகக் கருத்திற்கொள்ளப்படுவதற்கு அவ் ஊழியர்களின் சேமலாப நிதியத்தின் சபைப் பங்களிப்பு ரூபா 755,110 சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது அப் பெறுமதி

மீளாய்வாண்டின் போது நகர சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் பங்களிப்பில் விதவைகள் அனாதைகள் பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டு விதவைகள் அனாதைகள் நிதியத்திற்கு செலுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிராததுடன் அப் பகுதி முற்றாக ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிர்வாகம்

சிலாபம் நகர சபையின் மாகாண சபை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நூலக மற்றும் சுகாதார நிலையக் கட்டிடத்தின் ii ஆவது மற்றும் iii ஆவது கட்ட இறுதிக் கொடுப்பனவு 2012 யூலை 10 ஆம் திகதி மேற்கொள்ளப்படுகையில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,140,652 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட வேண்டிய வைப்பாக ரூபா 1,172,102 கூடுதலாக வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) ஒப்பந்த கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு